பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L 89
வர்த்தகம்:-
பகுதி — 2
30 - 12 - 88ல்
ஆரம்பம்
By
திரு. தேவா
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

உதயன்

விலை ரூ 2/-

A/L 90
2nd Batch
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.
வர்த்தகம்
திரு. தேவா
கணக்கியல்:-
திரு. மரியதாஸ்
பொருளியல்:-
திரு. லோகசிங்கம்
அளவையியல்:-
திரு. விக்கி.

கடர்: 4 விபவ ஹூ மார்கழி மீ 14 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 19 (29-12-1988) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 31

ஒப்பந்தத்தை ஜே. ஆர். - ராஜீவ் மீளாய்வு செய்வர்

கொழும்பு டிச 29

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவிருக்கின்றனர்.

இஸ்லாமபாத்தில் இரு தலைவர்களும் சந்திக்கும் போது மீளாய்வு இடம்பெறும் என்று கொழும்பில் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று வியாழன் பிற்பகல் 1.45 மணிக்கு ராவல்பிண்டி விமான நிலையத்தில் திரு. ஜெயவர்த்தனவை பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கானும் பிரதமர் பெனஸிரும் வரவேற்பர்.

மரியாதை அணி வகுப்பு அளிக்கப்படும். அணிவகுப்பை திரு. ஜெயவர்த்தன பார்வையிடமாட்டார். அதற்குப் பதில் இலங்கை, பாகிஸ்தான் நாடுகளின் தேசிய கீதங்கள் இசைக்கப்படும்.

சிந்த் ஹவுஸில் திரு. ஜெயவர்த்தன தங்குவார். அங்குதான் பிரதமர் ராஜீவ் காந்தியும் பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத்தும் தங்கி இருப்பர்.

நாளை இஸ்லாமபாத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அடுத்த சார்க் மாநாடு இலங்கையில் நடக்கும்

இஸ்லாமபாத், டிச. 29

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஐந்தாவது சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

தற்போது நடைபெறும் நான்காவது சார்க் மாநாட்டை கடந்த நவம்பரில் இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இங்கு நிலவிய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு இடத்தை மாற்றும்படி இலங்கை கோரியது

இதனையடுத்து இந்த மாநாடு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிற்கு மாற்றப்பட்டது.

(உ)

வெளியூர்த் தபால்கள் வாரத்தில் 3 நாட்கள் வரும்

யாழ்ப்பாணம், டிச, 29

வெளியூர்த் தபால் பொதிகளை வாரத்தில் மூன்று தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பு- வவுனியா ரயில் சேவை சீரடைந்ததையடுத்து தபால் திணைக்களம் இதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வரும் தபால் பொதிகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தபால் பொதிகள் செவ்வாய், வியாழன், ஆகிய நாட்களில் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படும். (உ-எ)

‘காஸ் டேர்பைன்’ மூலமான

இரவுநேர மின்விநியோக முயற்சி இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், டிச. 29

லங்கா சீமெந்து நிறுவனத்தின் காஸ்டேர்பைன் ஜெனரேட்டர் மூலம் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு வந்த இரவு நேர மின்சார விநியோகத் திட்டம் நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது சில நடைமுறைச் சிக்கல் மற்றும் தொழில் நுட்பப் பிரச்சினை காரணமாகவே இது இடைநிறுத்தப்படுகிறது.

எனினும் சுன்னாகத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

உயர்தரப் பரீட்சை முடிவு இன்று வெளியாகும்

கொழும்பு டிச 29

கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று வியாழன் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்தார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு முடிவுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என் அறிவிக்கப்பட்டது.

கொழும்பு மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் இன்று நண்பகல் 12மணிக்கு பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரில் வந்து முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான முடிவுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

(உ-எ)

ஒப்பந்தம் குறித்து

பிரேமாவை சந்தித்து பேச வேண்டும் - ராஜீவ்

உடனடியாக எதுவும் கூறமுடியாது என கும்பகோணத்தில் தகவல்

கும்பகோணம், டிசம்பர் 29

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக திரு. ஆர். பிரேமதாஸா தெரிவு செய்யப்பட்டிருப்பது, இலங்கை — இந்திய ஒப்பந்தம் தொடர்பாக என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உடனடியாகக் கூறமுடியாது. முதலில் அவரைச் சந்தித்துப் பேசவேண்டும். அதன் பின்னரே விளைவுகள் குறித்து எதையும் கூறமுடியும்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இப்படித் தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்கு ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரு.காந்தி நேற்று கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

“ஒப்பந்தம் முழு அளவில் அமுல் செய்யப்படுவதை நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். அதுவே முக்கியமானது’’ -என்று அவர் அங்கு வலியுறுத்திக் கூறினர்.

தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தல் தொடர்பான தமது கடசியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் தமிழகத்தில் வைத்து வெளியிட்டார்.

(உ-எ)

மாகாணசபை உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு,டிச.29

வடமத்திய மாகாண சபை உறுப்பினர் யு. என். எஸ். பண்டாமுல்ல என்பவர் இனந்தெரியாத நபர்களினுல் கடந்த திங்கள் பகல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பக்கமுனை பொலீஸ் பகுதியில் குமாரஎல எனும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

[உ எ]

யாழ். மட்டக்களப்பு ரயில் சேவைகளை ஆரம்பிக்க

இ அ. படையின் பதில் எதிர்பார்ப்பு

கொழும்பு, டிச. 29

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு பயணிகள் ரயில் சேவைகளை ஆரம்பிக்க இந்திய அமைதிப்படையின் பதிலை ரயில்வேத் திணைக்களம் எதிர்பார்த்திருக்கிறது.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தாகக் கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ரயில்களை சேவைக்கு விட நாம் தயாராக உள்ளோம். ஆனுல் அமைதிப் படையினரின் உத்தரவாதம் தேவைப்படுகிறது.

பாதுகாப்பு வழங்குவதாக அமைதிப்படை கூறவேண்டும். அல்லது பாதுகாப்பு வழங்குவது தேவைப்படாது என்று உறுதி தரவேண்டும்.

இப்படி அப்பேச்சாளர் மேலும் சொன்னுர்.

கிரிக்கெட் வீரர் சித்துவை பொலீஸார் தேடுகின்றனர்

புதுடில்லி, டிச. 29

பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் நவஜோத் சிங் சித்து ஒருவரின் மரணம் தொடர்பாக பொலீஸாரினுல் தேடப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

குர்ணும்சிங் என்பவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் மரணமானதைத் தொடர்ந்து சித்து தலைமறைவாகி விட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

முச்சந்தி முரளி



அப்ப.... ஜெனியாருக்கு பொறி வைச்சாச்சு எண்டு சொல்லுங்கோ..!

சார்க் தலைவராக பெனஸிர்

இஸ்லாமாபாத், டிச29

சார்க் நாடுகளின் தலைமைப் பதவியை இன்று நடைபெறும் சார்க் மாநாட்டின் போது நேபாள மன்னர் பிரேந்திராவிடமிருந்து பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ ஏற்றுக் கொள்வார்.

இயக்க மோதல்களை நிறுத்தி புரிந்துணர்வை வளர்க்குக!

‘மேர்ஜ்’ வேண்டுகோள்

யாழ்ப்பாணம் டிச 29

இன்று தமிழ்ப் பிரதேசங்களில் மீண்டும் தோன்றியுள்ள இயக்க மோதல்கள் தேவையற்றவை.

பிரச்சினைகளுக்கு ஆயுதங்களால் மட்டும் தீர்வு காண முயலாது புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் பத்திரிகை அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

மனித உயிர் எல்லா உயிர்களிலும் பார்க்க மேலானது. மனித உரிமைகள் மதித்தற்குரியன. மனித சுதந்திரம் மகத்தானது. இவற்றை அடிப்படையாகக் கொண்டே தமிழினத்தின் விடுதலை இயக்கங்கள் தம்மை ஈடிணையற்ற தியாகங்களுடன் அர்ப்பணித்துப் போராடி வந்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுதந்திர அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கி வந்த விடுதலை இயக்கங்களிடையே காலத்துக்குக் காலம் தோன்றிய மோதல்கள் தமிழ் மக்களின் சுபிட்சத்தை தடைப்படுத்தும் பிரதான காரணிகளுள் ஒன்ருகி விட்டன.

முந்திய தடவைகளில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

29. 12. 1988
மார்கழி 14
வியாழக்கிழமை
சுபநேரம்:
07.59முதல் 09 29வரை
ராகுகாலம்;
1.59முதல் 3.29வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

18 அதிபர்களுக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம்' டிச. 29

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றிய 18 பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

அதிபர் தரம் ஒன்றுக்கு மூவரும், தரம் இரண்டிற்கு 12 பேரும். தரம் மூன்றுக்கு மூன்று பேரும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பதவி உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காமினி ஜெயசூரியா, சிறில் மத்தியூ

விலகியோரை மீண்டும் ஐ.தே.க.வில் சேர்க்கமுயற்சி!

கொழும்பு, டிச. 29

முன்னுள் அமைச்சர்கள் சிறில் மத்தியூ, காமினி ஜெயசூரியா ஆகியோரை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்க்கும் முயற்சிகள் அந்தரங்கமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கட்சியின் பலத்தை அதிகரிப்பதற்கு புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பிரேமதாஸ எடுக்கும் முக்கிய நடவடிக்கைகளில் இது ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி மாநாட்டுக் காலத்தின்போது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்தே சிறில் மத்தியூ அமைச்சர் பதவியில் இருந்தும் கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டார்.

மாகாண சபைத் திட்டத்தை அரசு ஏற்றது பிடிக்காமல் அமைச்சர் பதவியையும் எம். பி. பதவியையும் ராஜினமாச் செய்துவிட்டு வெளியேறியவர் காமினி ஜெயசூரியா.

(உ-எ)

ரெனியின் நிறுவனங்கள் குறித்து விசாரணை

கொழும்பு, டிச. 29

முன்னுள் நிதியமைச்சர் ரெனி டி மெல்லுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் தொடர்புடைய நிறுவனங்களின் நிதி விவகாரங்கள் குறித்து விசாரணை செய்யப்படும்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

(உ-ச)

நிவாரணம் வழங்குவதில் வங்கிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், டிச. 29

மீளக் குடியமர்தல் நிவாரணப் பணத்தை வழங்கி முடிப்பதில் வங்கிகள் திண்டாட்ட நிலைக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தகைய ஒரு சூழ்நிலையில் 17 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு உரிய நிவாரணப் பணம் இன்னமும் வழங்கப்படாமல் வங்கிகளில் தேங்கிக் கிடப்பதாக வங்கி வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

மீளக் குடியமர்தல் நிவாரணப் பணம் வாரத்தில் சனி, ஞாயிறு நாட்களில் மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த இரண்டு தினங்களிலும் ஆகக் கூடியது மூவாயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணப் பணம் வழங்கப்படுகிறது.

இதன் காரணமாகப் பல குடும்பங்கள் நிவாரணப் பணத்தை காலதாமதமாகியே பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கிகள் தொடர்ந்து இயங்கினுல் தேக்கம் இன்றி நிவாரணப் பணத்தை, பொது மக்களுக்கு கொடுத்து முடித்துவிடலாம் என்றும் வங்கி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. (அ-10)

இயக்க வேறுபாடின்றி புனர்வாழ்வு நடவடிக்கைகள்

ஈ.பி.ஆர்.எல் எவ். பிரமுகர் கூறுகிருர்

யாழ்ப்பாணம், டிச. 29

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் கெடுபிடிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தீரமுடன் ஆயுதமேந்திப் போராடினுர்கள். இப்போராட்டத்தில் மரணித்தவர்களின் குடும்பங்களுக்கும், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் எவ்வித இயக்க வேறுபாடுகளுமின்றி, அரசியல் குரோதங்களற்ற வகையில், பரந்த அடிப்படையில் புனர்வாழ்வு வேலைகளில் முன்னுரிமை அளிக்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. கே. ரவீந்திரன் இப்படிக் கூறினர்.

பலாலி, வயாவிளான், மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த பிரமுகர்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இப்படிச் சொன்னுர்.

இது தொடர்பான

(6 ஆம் பக்கம் பார்க்க)

கோண்டாவில்பகுதியில் நேற்று மோதல்!

யாழ்ப்பாணம் டிச 29

கோண்டாவில் பகுதியில் நேற்று நண்பகல் 11 மணியளவில் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இங்கு நிகழ்ந்த மோதலில் சிலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனுல் அச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் போது இடையில் சிக்கி காயமடைந்த பொன்னையா மாணிக்கம் (வயது 55) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (உ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 2 SRI தொடரிலக்கம் உள்ள மைனர் கார். BSA நீரிறைக்குமியந்திரம், Hermes Ambassador ஆங்கில தட்டச்சியந்திரம், Halda தமிழ் தட்டச்சியந்திரம் ஆகியன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (8444)

26 ஸ்ரீ தொடர் இலக்க Hindustan லொறி நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. நேரில் தொடர்பு கொள்ளவும்: S. நீக்கிலஸ் செல்வரெட்ணம், கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலி. (8436)

புதிதாகச்செய்த திறம் கூடுகளுடன் 14 Love Birds (கிளியினச் சிறு பறவைகள்) சில கோழிகளும் உடன்விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்: 257, அரசடி வீதி, யாழ்ப்பாணம். [8438]

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், ஹோல் செற், கண்ணாடி மேசை, Show case, Baby தொட்டில், வாங்கு மேசை, கடைச்சல்வேலை அமைந்த அலுமாரி, மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 307 பலாலிறோட், திருநெல்வேலி சென்றல் நேசிங் ஹோம் எதிரில். (8518)

3 K. V. Lister ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. நா. சிவபாலமூர்த்தி பாதிரி கோவிலடி லேன், கே கே.எஸ். றோட், கொக்குவில். (8395)

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: அரவி ஜுவலியகம், 166, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/857)

கோழிக் குஞ்சு விற்பனை

நன்கு பராமரிக்கப்பட்ட அய்லன் கறுப்பு, வெள்ளை ½ மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 23, பிச்றோட், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (8435)

மொத்தமாக கலண்டர்-டயறிகள்

மெய்கண்டான் லீலா அஷ்டலக்ஷ்மி இரகுநாதையர், திருக்கணித, அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர் டயறிகள், பல டிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு. மக்மிலன் புத்தகசாலை, இல. 3, பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-954)

தேவை

லலிதா ஜுவல்லறி ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பெண் பிள்ளை தேவை. வரும்போது உங்கள் பெற்றோருடன் வரவும். (8137)

மணமகன் தேவை

கனடாவில் வசிக்கும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த யாழ் இந்து உயர் வேளாள குல 42 வயதுடைய தாரமிழந்த (விபத்தொன்றில்) குழந்தைகளற்ற படித்த அழகிய பண்பான பெண்ணுக்கு ஏற்ற மணமகன்தேவை. சாதகம் உட்பட ஏனைய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 408, மே/பா உதயன். யாழ்ப்பாணம். (8228)

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய யாழ் இந்து உயர்வேளாள குல (சுத்த தாவர போசன) படித்த அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் (வீடு தவிர) காணி, ரொக்கம் நகை வழங்கப்படும். சாதகக்குறிப்பு உட்பட ஏனைய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 386, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (8230)

தவறிவிட்டது

அப்துல் ஹமீட் முஹம்மட் சுபைர் என்பவருடைய 373186 இலக்கமுடைய லைசன்ஸ் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (8440)

சுகந்தி ஜோசப் ஆகிய எனது அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை, திறப்புக் கோர்வை, குறிப்பிட்டளவு பணம் ஆகியன பேர்ஸுடன் 26-12-88 கிளிநொச்சி மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (8511)

26ஆந் திகதி திங்கட்கிழமை ஒரு கோர்வை திறப்புகள் (நாலு) தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விக்ரோறியாஸ், 128, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற கடையில் கொடுக்கவும். (8513)

முருகேசு சந்திரமலர் ஆகிய எனது அடையாள அட்டை இல: 497170249V, 23-12-88ல் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மண்டான், கரணவாய் தெற்கு, கரவெட்டி என்னும் விலாசத்திற்கு அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8442)

தம்பித்துரை, நளாயினி தம்பித்துரை (நாவற்குழி) ஆகிய எங்கள் இருவருடைய அடையாள அட்டைகளை யாழ். பஸ் நிலையத்தில் தவறவிட்டு விட்டோம். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8525)

கண்டெடுக்கப்பட்டது

எமது ஸ்தாபனததில் 26 ஆம் திகதி எண்ணை வாங்கியவர் வெளிநாட்டுக் கடிதத்தையும் சிறிய தொகைப் பணத்தையும் தவறவிட்டுள்ளார் தகுந்த ஆதாரத்துடன் வந்து பெற்றுக் கொள்ளவும். பரிமளா ஸ்ரோர்ஸ் 26 A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [8520]

ஜெனெறேட்டர் வாடகைக்கு

25 KVA 3 Phase ஜெனெறேட்டர் வாடகைக்குக் கொடுக்கப்படும் சந்தோர் நேரத்தில் தொடர்பு கொள்ளவும்; Peppans Organisation 846 K. K. S. Road. Jaffna. (மில்க் வைற் ஸ்தாபனத்துக்கு முன்னால்) (8505)

பேக்கறி வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள பேக்கறி வாடகைக்கு விடப்படும். உடனே தொடர்பு கொள்ளவும்; பஸ்ரியன் பேக்கறி. மானிப்பாய். (8507.

சுஜேரா ரவல்ஸ்

போனியோ (Brunei), தைவான் (Taiwan) ஆகிய இரு நாடுகளுக்கும் சகல தரப்பு வேலையாட்கள் தேவையாக இருக்கிறது. இந்நாடுகளுக்கு வேலைக்குச் செல்ல விரும்புவோர் தாமதியாது தைமாதம் 4ஆந் திகதிக்கு முன்னர் சுஜேராஸ் ஸ்தாபனம், No 21, வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/985)

மீண்டும் ஆரம்பம்

குண்டு வெடிப்பின் காரணமாக மூடப்பட்டிருந்த ''சிவா வாச் வேக்ஸ்' ஸ்தாபனம் 29-12-88 இன்று முதல் இயங்கும் என வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (8441)

வகுப்புகள்

சகல வயதினர்களுக்கும், எல்லாத் தரத்திற்கும் பிரெஞ்ச் வகுப்புகள் 04.01.89 புதன் கிழமை புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு:- யாழ் பிரெஞ்ச், நட்புறவுச் சங்கம் Alliance Francaise De Jaffna 130, 1st Cross Street, Jaffna. (8419)

ஆங்கில / சிங்கள வகுப்புகள்

1-1-1989 ஆரம்பமாகும். சனி, ஞாயிறு ஆங்கிலம், சிங்களம் முறையே காலை 9-00-10 30, 10-30 - 12-00 தொடர்பு:- I. E. T; கல்வி ஸ்தாபனம், 11 B. பிரான்லி வீதி. யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி.] [8439]

வழங்குநர்களை பதிவு செய்தல் 1989

சாவகச்சேரி பிரதேச சபை

பொருட்கள்/ சேவைகள்	பதிவுக் கட்டணம்
1. காகிதாதிகள் உபகரணம்	50/-
2. சுகாதார சேவைப் பொருட்கள்	50/-
3. மின்சாரப் பொருட்கள்	50/-
4. சிருடைகள், சப்பாத்து	50/-
5. தளபாடங்கள்	50/-
6. அச்சிடுதல்- புத்தகம் கட்டுதல்	50/-
7. சித்த மருந்துகள்	50/-

விண்ணப்ப முடிவு திகதி:-
16 - 1 - 1989

விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

கொடிகாமம்,
27- 12- 1988 (C540)

---

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

திரு. அம்பலவாணர் சரவணபவான்

உதயம்:- 07- 11- 1920
அஸ்தமனம்:- 29- 11- 1988

அன்று
புஷ்பம் ஒன்று
அஸ்தமித்துப் போனது
வழிகாட்டி நின்ற
கலங்கரை விளக்கொன்று
வீழ்ந்து விட்டது
எம்மை
இருளாக்கி விட்டு
ஆண்டவன் பாதங்களை
ஒளியாக்க
அந்த வெளிச்சம்
விரைந்து விட்டது
கடலாகிப் போனது எம் கண்கள்
கனவாகிப் போனது
எம் எண்ணங்கள்
வெறுமையாகிப் போனது
அடிக்கடி நியமரும்
அந்த......
சாய்மனைக் கதிரை மட்டுமல்ல
எம் நெஞ்சுகளும்தான்
மலர்ந்தன யாவும்
வாடுதல் இயல்பு
தளர்ந்த எங்கள்
உள்ளங்களில்
ஆங்காங்கே
சில ஒளிப்புள்ளிகள்
மேலான சக்தியாய்
நின்று......
நாளுமே எம்மைக்
காப்பாயென்ற
நம்பிக்கைக்
குறிகளவை.

மனைவி, மகன், உறவினர்கள்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (8718)

யாழ். மாநகர வர்த்தகர்களுக்கு

ஓர் பணிவான வேண்டுகோள்

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் எதிர் வரும் 01-01-1989 ஞாயிற்றுக் கிழமையில் இருந்து தொடர்ந்து வரும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் மூடி வர்த்தக ஊழியர்களுக்கு லீவு வழங்குமபடி யாழ். மாநகர வர்த்தக ஊழியர் சங்கம் சார்பில் தாழ்மையாய் வேண்டிக் கொள்கின்றேன். இவ் வேண்டுகோளை மீறும் வர்த்தகர்கள் மீது சங்கம் கடும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இங்ஙனம்
த. தியாகலிங்கம்,
செயலாளர்.

யாழ். மாநகர வர்த்தக
ஊழியர் சங்கம். (8523)

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

ஜேர்மனி
10 நாட்களுக்குள்
பிரயாண ஒழுங்குகள்.

சவூதி Saudi

1. Drivers - 600 SR 25 பேர் (உடன் பிரயாணம்)
2. Cleaners - 400 SR 50 பேர் (உடன் பிரயாணம்)
3. AB-Seaman - 450 SR 4 பேர்
4. GP-Seaman - 400 SR 4 பேர்
5. Car mechanic - 800 SR ஒருவர்
6. Chief mates - 1000 SR 4 பேர்
7. Boat surines - 500 SR 2 பேர்
8. Maintenance sup.-2500 SR 2 பேர்
9. " Electrician - 1100 SR 2பேர்
10. Shore Mechanics - 600 SR 2 பேர்
11. Tug machanics - 600 SR 10பேர்
12. Skippers - 900 SR 10பேர்
13. Chief Engineers -2000 SR 10பேர்

Food allowance 200 SR
2 கிழமைக்குள் பிரயாணம்

14. Electronic tech- 1000 SR 5பேர்
15. Diesel mech .. 800 SR 5பேர்
16. Electrician - 600 SR 3பேர்

அமெரிக்கா - Nurse/Housemaid 500 - USD 10 பேர்
(உடன் பிரயாணம்)

கப்பல் DeckBoys - 10 பேர் 12500/- [400 USD]

உடன் தொடர்பு கொள்ளவும்

அ. தவச்செல்வம் B.Sc(Hons)
ஆசிரியர்
நெல்லியான் வீதி,
சுழிபுரம்
(C/1006)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஏல விற்பனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் எதிர் வரும் 3-1-1989 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் வெற்றி பெறுவோர் முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி ஏலத்தில் வெற்றி பெற்ற பொருட்கள் அனைத்தையும் 03 1 - 1989 அன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

1. மணிக்கூடுகள்
2. தட்டச்சு இயந்திரங்கள்
3. பழுதடைந்த மேசைகள்
4. மர அலுமாரிகள்
5. உருக்கு அலுமாரிகள்
6. உருக்கு மேசைகள்
7. உருக்குக் கதிரைகள்
8. இரட்டிப்பு இயந்திரங்கள்
9. புதினப் பத்திரிகைகள்
10. கோவை உருக்கு அலுமாரிகள்
11. மரக் கதிரைகள்
12. பழுதடைந்த மின்சாரப் பொருட்கள்
13. தண்ணீர்த் தாங்கிகள்
14. குளிர்சாதனப் பெட்டிகள்
15. வெளியகற்றும் காற்றாடிகள்
16. துவிச்சக்கர வண்டி
17. கண்ணாடி அலுமாரிகள்
18. கட்டிட கழிவுப் பொருட்கள்

— பிரதிப் பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(C-1000)

ஊர்காவற்றுறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
ஊர்காவற்றுறை,

புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல்

சங்கத்திற்குப் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக சகல கிளைகளிலும் அங்கத்தவர் பதிவேடுகள் 1—1—89 முதல் 31—3—89 வரை திறக்கப்பட்டிருக்கும்.

அங்கத்தவர்களாகச் சேரவிரும்புவோர் கிளைகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அங்கத்துவ பங்குப் பணமாக ரூபா ஒன்று (ரூ. 1/-) செலுத்தி அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

28—12—88. செயலாளர்.
ஊர்காவற்றுறை. (C/1011)

உங்கள் எல்லோருக்கும் எமது இனிய

புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

எமது நேற்றைய சிறப்பு வெளியீடுகள்

உஷாசினிமா

(1) ✶ ரஜனிகாந் ✶ அமலா
நடித்த பாரதிராஜாவின்

கொடி பறக்குது
(ஒறிஜினல்)

(2) ✶ கார்த்திக் ✶ சரண்ராஜ்
நடித்த

காளிச்சரண்
(ஒறிஜினல்)

(3) ✶ அர்ஜுன் ✶ நிரோஷா
✶ செந்தில் நடித்த

பட்டிக்காட்டுத் தம்பி
(தரமானபிரதி)

உஷாசினிமா

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(8522)

FORTUNA ENTERPRISES

(Labour Licence No. 79)

Immediate Vacancies in Kuwait

உடனடி வேலை வாய்ப்புக்கள்

✶ குவைத்

1. Airport and Hospital Cleaners
விமான நிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் — 50
சம்பளம்: 35 KD
அத்துடன் மேலதிக வேலை இருப்பிடவசதி

4 - 1 - 89க்கு முன் பாஸ்போட்டுடனும்
7 போட்டோக்களுடனும்
விண்ணப்பிக்கவும்.

10 — 2 — 89க்கு முன்
பிரயாணமாகலாம்.

2. First Class Electricians — 4
சம்பளம்: 70 - 95 KD
3. Heavy Vehicle Drivers (கனரக சாரதிகள்) — 15
சம்பளம்: 90 KD
4. Labourers (Diggers) நிலம் தோண்டுபவர் — 4
சம்பளம்: 40 - 45 KD

நாட வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி:-

இ. விஸ்வேஸ்வராயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ் வீதி.
கொக்குவில்.
(C-1003)

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

24/5521 இலக்க பென்ஸ் லொறி விற்பனைக்கான கேள்விக் கோரல்

எமது சங்கப் பாவனையிலுள்ள 24/5521 இலக்க பென்ஸ் லொறி கேள்விக் கோரல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. விண்ணப்பங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு, கடித மேலுறையின் இடது பக்க மூலையில், "லொறி விற்பனைக்கான கேள்விக் கோரல்" எனக் குறிப்பிட்டு "பொது முகாமையாளர், 259 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 6. 1. 89 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன்பதாக நேரிலோ அல்லது தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பார்வையிடும் திகதி:-

2. 1 89 முற்பகல் 8 00 மணி தொடக்கம் பிற்பகல் 5. 00 மணிவரை.

பார்வையிடும் இடம் :-

யாழ். ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகம் இல. 259, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
27 12 88

(C/ 1002

சாக்கு விற்பனை

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் 4, 229 வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் சங்கத்தில் வைப்புப்பணம் ரூபா 300/-ம், கேள்விப்பத்திரப்பணம் ரூபா 12/50ம் செலுத்திப் பெற்ற கேள்விப்பத்திரங்களில் மெழுகு முத்திரையிட்ட கடித உறையில் "சாக்கு கேள்விப் பத்திரம்" என எழுதி 07-01-1989 சனிக்கிழமை காலை 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

சாவகச்சேரி,
27-12-88

(C/997)

பொதுத் தேர்தலில்

கிழக்கில் நான்கு முனைப்போர்

மட்டக்களப்பு, டிச 29 எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நான்கு முனைப் போட்டி ஏற்படலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் இத்தேர்தலில் ஒரே அணியில் போட்டியிட வேண்டுமென்ற அபிப்பிராயம் பரவலாக நிலவுகின்றது. அதற்கான முயற்சிகளும் நடந்து வருகின்றன.

அது சாத்தியப்படுமானால் நான்கு முனைப் போட்டிக்கு இடமுண்டு. இல்லையேல் பல முனைப் போட்டி நிலை உருவாகும்.

நான்கு முனைப் போட்டியில் தமிழ் கட்சிகள் அணி, ஸ்ரீ ல. சு. க., ஐ. தே. க., ஸ்ரீ ல. மு. காங்கிரஸ் எனபன கலந்து கொள்ளும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து ஒரே அணியில் போட்டியிட ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி விருப்பம் தெரிவித்துள்ளது. ஆனால் டெலோ, ஈ. என். டி. எல். எப், ஈரோஸ் வட்டாரங்களுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டு கேட்ட போது தத்தமது தலைமையகங்கள் தான் இதுபற்றி முடிவு செய்யும் என அவை தெரிவித்தன.

இத்தேர்தல் நிலைமை குறித்து ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் இம்மாத இறுதியில் மட்டக்களப்புக்கு வருகை தரவிருக்கிறார்கள்.

தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும், கலந்து கொள்ளக் கூடாது என்ற இரு தரப்பு அபிப்பிராயம் நிலவுவதாக அக் கட்சியின் மட்டக்களப்பு பிரமுகரொருவர் தெரிவித்தார்.

ஸ்ரீ. ல. சு. கட்சியை பொறுத்தவரை இத் தேர்தலில் இரு மாவட்டங்களிலும் போட்டியிடும் என அக்கட்சியின் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

ஐ. தே. க. பட்டியல் தயாரிக்கும் பொறுப்பு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது தலைமையிலான பட்டியலில் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்கள் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் கொண்ட பட்டியல் தயாரிக்கப்படும்.

ஸ்ரீ ல. மு. காங்கிரஸ் — ஐ. தே. க. கூட்டு இடம்பெறுமென அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டபோதிலும் அது சாத்தியப்படுவதற்கான சூழ்நிலை இல்லை என விஷயமறிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். (அ-21)

திருப்பணிகள் செய்வது ஊருக்குப் பெரும் சிறப்பு

கும்பாபிஷேக விழாவில் உரை

மானிப்பாய், டிச, 29 'ஆலயத் தொண்டை மெய்யன்போடு செய்வது புனிதமான பணி. ஆலயத் திருப்பணிகளை நிறைவுசெய்து கும்பாபிஷேகம் செய்வது ஊருக்கும் மக்களுக்கும் பெரும் சிறப்பை ஏற்படுத்தும். ஆலயங்களைப் புதிதாகக் கட்டுவதைவிட, கட்டப்பட்ட ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்து புனிதமாக்குவது மேலானது.

மானிப்பாய் வடக்கு ஆள்வாக்குறியாள் தோட்டம் ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலய மண்டலாபிஷேக சங்காபிஷேக நாளன்று மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டுவைத்து உரையாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கோவிலில் அண்மையில் பரிவாரமூர்த்திகளான ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ காளியம்பாள், நரசிங்க வைரவர் ஆகிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகமும், கும்பாபிஷேக மலர் வெளியீடும் நடைபெற்றன.

சிவாகமக்கிரியா இரத்தினம் உடுவில் சிவஸ்ரீ சாம்பசிவ சோமசேபசகுருக்கள் பிரதிஷ்டா கும்பாபிஷேக பிரதம குருவாகஇருந்து கிரியைகளை நடத்திவைத்தார்.

மலர்வெளியீட்டுவிழா காரைநகர் இளைப்பாறிய பேராசிரியர் வித்துவான் மு சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

லண்டன்மாநகரத்தில் வாழும் கலாநிதிகள் இராசவதனை சிவலோகநாதன் தம்பதிகள் தொகுத்தனுப்பிய தோத்திரப்பாடல்களும் கீர்த்தனைகளும் கும்பாபிஷேகச் சிறப்பு மலரில அடக்கப்பட்டு வெளியிடப்பட்டன. (ச-90)

மனித உரிமைகள் சங்கம் கோரிக்கை

கிரான் சந்தையில் ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட நேசதுரை செல்வரத்தினம் தொடர்பான தகவல்களை தந்துதவுமாறு சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின மேற்கு ஜெர்மன் பிரதிநிதி மட்டக்களப்பு பிரஜைகள் குழுவைக் கோரியுள்ளார்.

(இ 21

இலவசம்

யாழ்ப்பாணம். டிச 29 கண்பார்வைகுறைந்த 65 பேருக்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலையில் வைத்து டாக்டர் ஏ அருணாசலம் கண்ணாடிகளை வழங்கினார்.

கோப்பாய் லயன்ஸ் கழக தலைவர் திரு கு. கிட்ணர் தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

நல்லூர், கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்களுக்கே இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (இ-19)

யுத் கார்மேல் கழக நத்தார் நிகழ்ச்சிகள்

குருநகர் டிச 29 "யுத் கார்மேல்" விளையாட்டுக் கழக வீரர்கள் பங்கெடுத்த பூப்பந்து விளையாட்டு என்னை மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

குருநகர் யுத்கார்மேல் விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்திருந்த நத்தார் தின விசேஷ நிகழ்ச்சியில் கலந்து பேசிய சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் திரு அ. ஸ்ரனிஸ்லெயாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

நத்தார் தினத்தை கொண்டாடும்பொருட்டு உதைபந்தாட்டம், பூப்பந்து விளையாட்டு, சிறுவர்களுக்கு நத்தார் பப்பா பரிசில் வழங்கல் என்பவற்றுடன் விருந்துபசார நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

திரு. மா. செல்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யுத்கார்மேல் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு. எஸ் செல்வின் பேசுகையில் "மாணவர்களான இளம் சந்ததியினரைக் கொண்ட எமது கழகத்தின் முக்கிய நோக்கங்கள் முதலில் கல்வியை வளம்படுத்துவது ஒழுக்கத்தைப் பேணுவது விளையாட்டுத்துறையில் மிளிர்வது.

இந்த அடிப்படையிலேயே செயற்பட்டு வருகிறோம்'' என்றார்.

விளையாட்டு அதிகாரி தி. கு. பீலிக்ஸ் பேசுகையில்: 'பூப்பந்து விளையாட்டு முதன் முறையாக யுத்கார்மேல் விளையாட்டுக் கழகத்தினால் சுற்றுப் போட்டி முறையில் நடத்தப்பட்டுள்ளது இதே போன்று பள்ளி மாணவர்களுக்கும் பயிற்சி வழங்க ஆயத்தமாக இருக்கிறேன் என்றார். (இ 51)

பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம் டிச 29 புதுக்குடியிருப்பில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்திய அதிகாரி திரு. யோகேஸ்வரதேவனுக்கு ஒரு பிரிவுபசார விழா அண்மையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் இடம் பெற்றது (ச 126)

துணுக்காய் உ. அ. அ பிரிவில் நிவாரணம்

மாங்குளம், டிச. 29 துணுக்காய் ஆலங்குளம், யோகபுரம் மேற்கு கிராம சேவகர் பிரிவில உள்ள 416 பேருக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை மீளக்குடியமர்தல் நிவாரணப் பணம் வழங்கப்பட உள்ளது.

மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு தங்கசிவம் இதனை உதயனுக்குத் தெரிவித்தார். (இ 94)

புதுக்குடியிருப்பில் ஈ. பி. ஆர். எல். எவ் அலுவலகம்

யாழ்ப்பாணம் டிச 29 ஈ. பி. ஆர். எல். எவ் கிளை அலுவலகம் ஒன்று புதுக்குடியிருப்புச் சந்தியில் உள்ள ஒரு கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது. (ச-126)

மண்டைதீவுக்கு மீனவர்கள் படையெடுப்பு

மண்டைதீவு டிச 29 மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் தற்பொழுது சூடை மீன் சீசன் ஆரம்பித்துள்ளது.

இதனால் வெளியிடங்களில் இருந்து சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் குடும்பங்களுடன் இப் பகுதிக்கு வந்து வாடி அமைத்து மீன் பிடித்து வருகின்றார்கள் (ஓ-88)

பதவி உயர்வு

மானிப்பாய், டிச 29 உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திரு. வை. யோகேஸ்வரன் இரண்டாந்தர அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். (இ-90)

எஸ். பி. அன்ரன் வழங்கும்
வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

★ சவூதிஅரேபியா ★

சவூதி அரேபியா பிரதம துறைமுகத்தில் இழுவைப் படகுப் பிரிவில (Tin Boat Division) பணியாற்றுவதற்குக் கீழ் காணும் பதவியாட்கள் அவசரமாகத் தேவைப்படுகிறது அடுத்த ஒரு வாரத்தில் கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் அதைத் தொடர்ந்து இரு வாரங்களில் பயண ஒழுங்கு செய்யப்படும்.

கார் மெக்கானிக்	1 ஆள்	450 றியால்
Chief mate	4 பேர்	800 - 1000 றியால்
Boatswains (போசன்)	2 பேர்	650 றியால்
Maintenance Engineer	2 பேர்	
Electrician	2 பேர்	
Shore Mechanic (Work Shop)	2 பேர்	
Tug Mechanics	(10 பேர்)	450 றியால்
Skippers	10 பேர்	800 - 900 றியால்
A. B	(10 பேர்)	400 றியால்

1. உணவுக்காக 200 றியால் மாதம் தோறும் வழங்கப்படும்.
2. இருப்பிடம் இலவசம்.
3. 2 வருட ஒப்பந்தம்.

கப்பல் அனுபவம் உடையவர்கள் மட்டும்
உடனடியாக விண்ணப்பிக்கவும்

அத்துடன்

கனடா, அவுஸ்திரேலியா, இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள

S. P. ANTON

(C 988)

உங்கள் இடங்களுக்கு ஒரு அறிவுக் களஞ்சியம்

ஆனந்தா

திருக்குறள் கலண்டர்

ஒரு கலண்டரில் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய எல்லா விஷயங்களும் அடங்கிய ஒரு திருப்திகரமான கலண்டர். நல்ல வெள்ளைக் கடதாசியில் அச்சிடப்பெற்ற ஸ்பெஷல் தரம்

LANKA COMMERCIAL ARTISTS

- சாவகச்சேரியில் -

DATA PROCESSING AND COMPUTER
PROGRAMMING IN

BASIC LANGUAGE

(Greate of Higher Education)

கல்வித் தகைமை:- G . C. E (O/L)

ஆரம்பம்:- 2. 1. 89 10. 00 a m:
(Monday)

ABLE TECHNICAL STUDIES
SCIENCE CENTRE
Post Office Road, CHAVAKACHCHERI

(8713)

★ தரமான கலர்ப் படப்பிரதிகள் ★

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ரூவை நாடுங்கள்

ஷப்ரூ நிதி நிறுவனம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 22073

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

திரு. வல்லிபுரம் கந்தையா

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பராயை வசிப்பிடமாகவும் கொண்ட எமது தந்தையும் மாமனுமாகிய திரு. வ. கந்தையா அவர்களது இறுதிச் சடங்கின் பொழுது பல வித உதவிகள் புரிந்தும், அனுதாபங்களைத் தெரிவித்தும், ஆறுதலளித்த உரும்பராய் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினருக்கும், யா/உரும்பராய் இந்துக்கல்லூரி, யா/காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது சொல்லரிய நன்றிகள். நாளை 30-12-88 வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திக்கிரியைகளில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவுடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி ஆனந்தராசா,
(ஆசிரியர்கள்)
அரச வீதி,
உரும்பராய். மகள் வ. இராசபூபதி.
(8707)

ஓராண்டு நினைவஞ்சலி

சுப்பிரமணியம் குகதாசன் (குகன்)

(இ. போ. ச. சாரதி)

மலர்வு: 20-08-1951 உதிர்வு: 10-01-1938

கல்லடியான் தோன்றலில் கந்தன் மறு நாமத்தில் கள்ளங்கபடமில்லா உள்ளத்தில், கருணை உள்ள தெய்வமே, குகனே! உன் ஏழைக்குத் தோழமையும் வெள்ளையுள்ளமும் விளையாட்டுப் புத்தியும் வினையாய் முடிந்துவிட உனை எண்ணி ஓராண்டு காலமாய் உருக்குலைந்தோம். நம்பிக் கெடுத்தவர்கள் என்ன ஆவாரோ? கண்ணீரால் பூசைசெய்து காத்திருப்போம் கடவுள் தீர்ப்பை உன் ஆத்மா சாந்தியடையக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்நினைவால் துயருறும்
பெற்றோர், உடன்பிறந்தோர்
சுற்றத்தார், சகோதரிகள்
''வசாவிளான்''
கட்டுவன். (8710)

முதலாம் வருட நினைவஞ்சலி

திருமதி
சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை
(ஏழாலை கிழக்கு, ஏழாலை)

மலர்வு: 1917-02-17 உதிர்வு: 1988-01-10

திதி: 1988-12-29

ஓராண்டு முடிந்ததம்மா
எம்மைவிட்டு நீ பிரிந்து
மாறாத துன்பத்தால்
நாளாந்தம் அழுகின்றோம்
குருதியே வரலாறாய்
குடாநாடு இருந்திட்ட
பொல்லாத நாட்களதை
எங்கள் இல்லமோ
நீ இல்லாது
வெறிச்சோடிப் போனதம்மா!
பொய்யல்ல; புவியுள்ள நாள் வரைக்கும்
எம் நெஞ்சமெனும் கடலைவிட்டு
நீங்காது உன் நினைவு
உன் ஆத்மா சாந்தியுற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

29-12-88 ஆந் திகதி வியாழக்கிழமை கோண்டாவில் மிஷன் பாடசாலை ஒழுங்கையில் அமைந்துள்ள எமது இல்லத்தில் இடம் பெறும் பகல் போசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மகன், மருமகள்,
தங்கை, பெருமகன்.

மிஷன் பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (8480)

நீர்ப்பாசன வாய்க்கால் கதவுகளை திறந்துவிட

மகாவலி அபிவிருத்தி திட்ட விவசாயிகளுக்கு அதிகாரம்

கொழும்பு, டிச 29

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு புதிய அதிகாரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.

குளங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றின் கதவுகளைத் (Sluice gates) திறந்து பயிர்ச் செய்கைக்குத் தேவையான அளவு நீரைப் பெற்றுப் பயன்படுத்தும் அதிகாரமே அது.

இதுவரை காலமும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளின் மேற்பார்வையில் இந்த அதிகாரத்தை திணைக்கள ஊழியர்கள் செலுத்தி வந்தனர்.

தீவிரவாதிகளின் விடுத்த பயமுறுத்தலைத் தொடர்ந்து அந்த ஊழியர்கள் வேலைக்குச் செல்லுவதில்லை.

அதனால் குளங்கள் திறக்கப்படவில்லை. நெற்பயிர்கள் கருக ஆரம்பித்தன.

இதைத் தொடர்ந்தே புதிய அதிகாரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (இ-ள)

தூண்டில் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம் டிச. 29

டொமினிக் ஜீவாவின் ''தூண்டில்'' மல்லிகைப் பந்தலின் ஆறாவது நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மொடர்ன் மினிசினிமா மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு கோகிலா மகேந்திரன் தலைமை வகிப்பார்.

வண்ணார் பண்ணைப் பகுதியில்

''சேவன சரண'' மானியம் பெற எட்டுக் குடும்பங்கள் தெரிவு

குருநகர், டிச 29

''சேவன சரண'' 10 கோடி ரூபா வீடமைப்பு திட்டத்தின் கீழ் பத்தாயிரம் ரூபாவை மானியமாகப் பெற வண்ணார் பண்ணைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட எட்டுக் குடும்பங்களின் விபரங்கள் வருமாறு

1 சிறீதயாளன். 2. த.செல்வராசா. 3 கோ. விக்கினேஸ்வரன். 4 சுப்பிரமணியம் நாகேஸ்வரி, 5. த சிவகுமார், 6 த.அருள்சோதிநாதன், 7. கா குகானந்தன் 8. கு இராசநாதன் (இ 51)

தீவுப்பகுதி தெற்கில் 66பேருக்கு வீடமைப்பு மானியம்

மானிப்பாய், டிச 29

''சேவனசரண'' பத்துக் கோடி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 66 பேருக்கு வீடமைப்பு மானியம் கிடைத்துள்ளது.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு இத்திட்டத்தின் கீழ் வீடமைப்பு மானியம் வழங்கவென மூன்று லட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா கிடைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

வீடற்ற வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கும் வீடுகளைப் பூர்த்திசெய்வதற்குமாக இந்த மானியம் வழங்கப்பட்டு வருகின்றது.

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதினொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் மொத்தம் 66 வீடுகள் இந்த உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருவதாகக் கிராம சேவையாளர் ஒருவர் தெரிவித்தார். (ச-90)

ஓராண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:
01 - 10 - 1897
●
மறைவு:
09 - 01 - 1988

அமரர்
திரு. வேலாயுதர் சபாபதி
(ஓய்வு பெற்ற கணக்காளர், மலேசியா)

சித்திரத்தில் அமைந்திடுமோ
சிந்தனையில் அடங்கிடுமோ
இத்தலத்தில் எமக்கு நீர்
ஆற்றிய அரும் பணிகள்
முத்தனைய மனையாளும்
மாண்புமிகு மக்களும்
சித்த நிறைவோடு
சீரோடு வாழ்ந்திடவே
நித்த நித்தம் நிர்மலனின்
நினைவில் ஆழ்ந்திரே
நித்தியமாய் நின் நாமம்
நிலையாய் நிலைத்திடவே
உத்தமராய் வாழ்ந்திட
உள்ளம் உருகியே
அத்தன் இணையடியை
இறைஞ்சி நிற்போமே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15, கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில். (8455)

ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம் டிச 29

வலிகிழக்கு தெற்கு பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரான திரு நீ. சிவசுப்பிரமணிய ஐயர் தனது முப்பத்தைந்தாண்டு கால சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1954 ஆம் ஆண்டு ஐக்கிய பண்டகசாலைச் சங்கங்களின் சமாஜமாக இருந்த காலத்தில் பதவியேற்று அக்காலம் முதல் சங்கத்தின் துரித வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உழைத்து வந்தார்.

இவர் பல காலமாகப் பணியாளர் சிக்கன சேமிப்புச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றினார்.

1980 ஆம் ஆண்டு கூட்டுறவு ஆசிரியர் பயிற்சித்திட்டத்தை செயல்படுத்துவதற்காக இச்சங்கம் சர்வதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்ட போது அதற்கான பயிற்சியைப் பூரணமாகப் பெற்றதுடன் அத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கான பயிற்சியை அளிப்பதிலும் முக்கிய பங்காற்றினர். (ச)

அப்பீல் நீதிமன்றத்தில் 500 ஆட்கொணர்வு மனுக்கள் இவ்வருடத்தில் மட்டும் தாக்கல்

கொழும்பு, டிச29

இவ்வருடம் அப்பீல் நீதிமன்றத்தில் சுமார் ஐநூறு ஆள்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டோரை அல்லது படையினரால் கைது செய்யப்பட்டோரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றில் நூற்றுக்கும் அதிகமானவை மாணவர்கள், பௌத்த பிக்குமார் ஆகியோரின் பேரில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 40 பிக்குமார்கள், 55 பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

அநேகமான மனுக்களில் கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா என்பது தமக்குத் தெரியாது என மனுதாரர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த மனுக்களில் பொலீஸ்மா அதிபர், இராணுவ தலைமை அதிகாரிகள், [illegible] அதிபர். பிரதி பொலீஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். (உ)

துதிப்பாடல் பாடினால் இறையருள் கிடைக்கும்

மண்டைதீவு, டிச. 29

ஆலயங்களில் துதிப்பாடல்களைப் பாடும்போது துதிப்பாடற் திரட்டு நூலில் உள்ள பாடல்களையும் சேர்த்து பாடினால் இறைவனின் அருள் அடியவர்களுக்கு கிடைக்கும்.

மண்டைதீவு சென்னியூர் கவிஞரின் துதிப் பாடற் திரட்டு கவிதை நூலின் அறிமுகக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசிய அல்லைப்பிட்டி முன்னாள் கிராம அதிகாரி திரு. க. தவவிநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில திரு. தவவிநாயகம் தொடர்ந்து பேசுகையில்,

நூல் வடிவில் வெளியிட்ட வெளியீட்டாளருக்கு நன்றி சொல்ல வேண்டும். இவரது பாடல்கள் எல்லாம் மண்டைதீவு பகுதியிலுள்ள இந்து ஆலயங்களின் வரலாற்றுச் சிறப்புகளை குறிக்கும் பாடல்களாகவும், கடையிற் சுவாமியின் பெருமைகளை கூறுவனவாகவும் அமைந்துள்ளன.

ஆசிரியர் திரு. க. திருநாவுக்கரசு ஆய்வுரை நிகழ்த்துகையில், இன்றைய சூழ் நிலையில் இத்தகைய பாடற்தொகுப்பு ஒன்று வெளிவந்து இருப்பது பாராட்டத்தக்கது என்றார்.

திரு. என். இராமச்சந்திரன் நன்றி உரை கூறினார். (ஸி-88)

பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிச, 29

செங்கலடி தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் தர்மராஜன் பதவி உயர்வு பெற்று முல்லைத்தீவுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார் தபால் அலுவலங்களின் ஆய்வுப் பரிசோதகராக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. தர்மராஜன், சங்கானை, வயாவிளான், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் முன்னர் தபாலதிபராகப் பணியாற்றியவர்.

அவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். (அ)

கல்வியங்காட்டு பகுதியில் கொள்ளையர்

யாழ்ப்பாணம் டிச. 29

கல்வியங்காட்டுப் பகுதியில் கொள்ளையர் அட்டகாசம் அதிகரித்து வருகிறது

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள வீடொன்றில் சில தினங்களுக்குமுன் கொள்ளையர் புகுந்த போது வீட்டில் இருந்தோர் கத்திக்குளறினர்.

மக்கள் உஷாரடைந்ததை அடுத்து கொள்ளையர் தப்பித்துக் கொண்டனர் (இ-10)

கோரிக்கை

செல்வபுரம் வட்டுவாகல் சுகாதார நிலையத்துக்கு நியமனம் செய்யப்பட்ட மருத்துவ மாதை உடனடியாகக் கடமைக்கு அமர்த்துமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலம், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ச-92)

கட்டடவேலை நடைபெறுகிறது

மண்டைதீவு, டிச. 29

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் புதிய கட்டட வேலைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ச-88)

31ஆம் நாள் நினைவஞ்சலி

ராஜசேகரம் அகஸ்ரின் செல்வராஜா

மலர்வு: 31-12-1951 உதிர்வு: 29-11-1988

சீவியத்தில் நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்.

மதுரமான யேசுவே! அளவற்ற நீதியும், காருண்யமுள்ள தேவனே! மெய்யான ஆறுதல் அளிக்கும் கர்த்தாவே! இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமக்கு இயல்பாமே! எனவே இப்பூவுலக வாழ்வையும் சகல செல்வங்களையும் துன்ப துயரங்களையும் நீக்கி உம்முடன் ஒன்றித்திருக்க நேசத்துடன் தேவரீர் அழைத்துக்கொண்ட அகஸ்ரின் செல்வராஜா அவர்களின் ஆத்துமத்தை இரட்சித்தருளும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாறிக்காக 29-12-88 வியாழக்கிழமை மாலை 4-30மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் துக்கப் பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதர சகோதரிகள்,
மைத்துனர், பெருமக்கள், மருமகன்.
(8509)

60ஆம் நாள் நினைவு அஞ்சலி



கப்டன் கனேஜி அம்மான்

(கி சிவராசா, கம்பாமலை, ஒலுமடு)

அவதாரம்: 1951-02-04 அழிப்பு: 1988-10-30

அன்புள்ளம் கொண்டவனே
அன்புச் சோதரனே
அண்ணாவே, சிவா!
எம் உயிர் உள்ளவரை
உனை மறவோம்
நீ பிறந்த வடமராட்சி
நீ வளர்ந்த நெடுங்கேணி
நீ வாழ வைத்த விசுவமடு - மக்கள்

உனது நினைவு மாறாமல் தவிக்கும்:
உனது பெற்றோர்,
அண்ணாமார், அண்ணிகள், தம்பிகள்,
மைத்துனிகள், பெருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

கம்பாமலை,
வல்வெட்டித்துறை. (8384)

பொய்யாமொழி

குறள்:

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

பொருள்:

தகாதவற்றிற்கு நாணாமலிருத்தல், தக்கவற்றை நாடாமலிருத்தல், அன்பு இல்லாமை, நன்மை ஒன்றையும் விரும்பாமை ஆகியவை பேதையின் தொழில்கள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - [illegible]
இல: 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
29- 12- 1988 த. பெ. இல 83

தமிழருக்கு வேண்டும் உளவியல் புனர்வாழ்வு

உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக உளவளத்துணை நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிலையம் இன, மத, மொழி சார்பில்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவசமாகச் சேவை செய்யும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அசம்பாவிதங்கள் காரணமாக உளஉடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி போதைப் பொருள், மதுப்பழக்கம் ஆகியவற்றுக்கு அடிமையான இளைஞர்கள், சிறைகளில் இருந்து சித்திரவதைக்கு ஆளானதால் மனோபலம் பாதிக்கப்பட்டவர்கள், குடும்பப் பிரச்சினைகளால் மன நிம்மதி இழந்தவர்கள் ஆகியோர்களையும் ஆரோக்கியமான, சாதாரண பிரசைகள் ஆக்குவதே இந்த நிலையத்தின் பணிகளாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியின் அவசியத்தை உணர்ந்து, இவ்வாறான ஒரு நிலையத்தை ஆரம்பிக்க உந்துசக்தியாக இருந்தவர்களைப் பாராட்டுகின்றோம். எடுத்த காரியத்தை இடைநடுவில் விட்டுவிடாமல் அவர்கள் பணி புரிவதற்குச் சமூகப்பற்றுள்ள எல்லோரும் தம்மால் இயன்றளவு உதவ வேண்டும்.

வடக்கு, கிழக்கு வாழ் மக்களைப் பொறுத்தமட்டில், தொடர்ச்சியான இராணுவ அடக்குமுறையால் அவர்கள் பல வழிகளிலும் வகைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இது எவரும் பூசிமெழுகி மறைக்க முடியாத உண்மை.

மிகக் குறிப்பாக இளைஞர் சமுதாயம் சிறைச்சாலைச் சித்திரவதை தொடக்கம் தடுப்பு முகாம் சித்திரவதைகள் வரை உடல் ரீதியாக மட்டுமன்றி உளரீதியாகவும் மிக மோசமாகப் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது

இளைஞர்களான, மாணவர்களான தமது பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட இம்சைகளால், அவர்களின் பிரிவால் மனம்நொடிந்து போன பெற்றோர்களும் ஆயிரம் ஆயிரவர்!

இளைஞர்களைத் தேடும் வகையில் அவர்களது பெற்றோர்களுக்கு உண்டாக்கப்பட்ட பாதிப்புகளால் உளம் ஒடிந்தவர்களின் எண்ணிக்கையும் குறைவு என்பது அல்ல.

ஆகையால், இராணுவக் கெடுபிடிகளாலும், அசம்பாவிதங்களாலும் உளவியல் சிகிச்சை வேண்டி நிற்கும் தமிழர்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாதது.

ஸ்ரீலங்காப் போர் தமிழர்களை வெகுவாகப் பாதிக்கிறது. தமிழர்கள் பலருக்கு உளவியல் சிகிச்சை அவசியம் — என்று ''அராப் நியூஸ்'' என்ற பத்திரிகை அண்மையில் எழுதியிருந்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அந்தப் பத்திரிகையின் செய்தியாளர் அண்மையில் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு விஜயஞ் செய்திருந்தார்.

எனவே ஈழத்தமிழர்களுக்கு உளவியல் புனர்வாழ்வு மிகவும் அவசியமானது. அந்தப் புனர்வாழ்வின் மூலமே, வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டு, நிர்க்கதிக்கு ஆளாகி இருக்கும் பலருக்குப் புதுவாழ்வு அளிக்க முடியும். இதனை வெளிஉலகமே உணர்ந்திருக்கிறது.

மனம் பலவீனமுற்றவர்களை, பொதுவான சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வந்து சேர்க்கும் பெரும்பணி உளவியல் புனர்வாழ்வுப் பணியே.

இந்தப் பணியைச் செய்யும் பொறுப்பு அதிகமான அளவில் வைத்திய நிபுணர்களையே சாரும். வெளிநாடுகளில் ஈழத்தமிழ் டாக்டர்கள் பலரும் உளவியல் நிபுணர்களாக விளங்குகிறார்கள் என ஓர் அறிக்கை இயம்புகிறது. அவர்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் தங்கள் சகோதரர்களுக்கு உதவ முன்வருவார்களா?

இராணுவ அடக்குமுறை அட்டூழியத்துக்குப் புறம்பாக இப்போது எமது இளைஞர் சமுதாயத்தை அடிமைப்படுத்தி இருப்பது போதைப்பொருள் பாவனை. குடும்பப் பிரச்சினைகளும் இன்னும் சிலரை மனம் வெதும்பச் செய்கின்றன.

இவற்றால் பாதிக்கப்பட்டவர்களை விலக்கிவிடக்கூடாது. அவர்களுக்கும் உளவியல் புனர்வாழ்வு, சமூகப் புதுவாழ்வு அளிப்பது அவசியம்.

மொத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் புனர்வாழ்வு வழங்குவது ஒரு தனிவிடயமாக எடுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும்.

ராஜீவ் - பெனாஸிர் பேச்சுக்களின் முடிவில்

அணுசக்தி நிலையங்களை பரஸ்பரம் தாக்குவது இல்லை என இந்தியாவும் பாகிஸ்தானும் உடன்படிக்கை

இஸ்லாமபாத்தில் கைச்சாத்தாகலாம்

பெனாஸிர்

புதுடில்லி, டிச. 28

அணுசக்தி நிலையங்களை பரஸ்பரம் தாக்குவதில்லை என்ற உடன்படிக்கை ஒன்றை இந்தியாவும் பாகிஸ்தானும் செய்து கொள்ளவுள்ளன.

இது சம்பந்தமான கருத்து உடன்பாடு ஒன்று இந்திய - பாகிஸ்தான் தலைவர்கள் மட்டத்தில் ஏற்பட்டிருப்பதாக புதுடில்லி அரசின் உயர் வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நாளை வியாழன் இஸ்லாமபாத்துக்கு செல்கிறார்.

அப்போது இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகும் என்று பி.பி.சி. நேற்று அறிவித்தது.

திருமதி பெனாசிர் பூட்டோ பிரதமரான பின்னர் இந்தியப் பிரதமர் காந்தி பாகிஸ்தான் செல்லுவது இதுவே முதல்தடவையாகும்.

அதிபர் ஸியாவின் ஆட்சிக்காலத்தில் இந்திய பாகிஸ்தான் உறவுகள் சீராக இருக்கவில்லை.

அணுக்குண்டு தயாரிக்கும் வல்லமையை பாகிஸ்தான் பெற்றிருப்பதாகவும், பஞ்சாப் மாநில தீவிரவாதிகளுக்கு பயிற்சியும் ஆயுதங்களை பாகிஸ்தான் வழங்கிவருவதாகவும் இந்தியா அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்தது.

இரண்டையும் மறைந்த அதிபர் ஸியா மறுத்து வந்தார்.

பெனாஸிர் பிரதமரான பின்னர் ராஜீவ் காந்தி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ''பிரிவினைக்குப் பின்னர் பிறந்தவர்கள் நாம். ஆகவே இரண்டு நாடுகளின் உறவுகளும் சீராக நாம் முயற்சிக்க வேண்டும். அதற்கு உங்கள் பூரண ஒத்துழைப்பு வேண்டும்' — என்று கூறியிருந்தார்.

பிரதமர் பெனாஸிரும், இருநாடுகளும் பகைமையை மறந்து புதிய பாதையில் செல்ல வேண்டும். இந்தியப் பிரமதரின் இஸ்லாமபாத் விஜயம். அதற்கு வழிவகுக்கும் என்று நம்புவதாகத் தெரிவித்திருந்தார்.

ஒருகட்டத்தில் பாகிஸ்தானில் உள்ள அணுசக்தி நிலையங்களைத் தாக்க இந்தியா திட்டமிட்டிருப்பதாக ஸியா அரசு குற்றஞ்சாட்டியிருந்தது.

ராஜீவ்

பதிலுக்கு பாகிஸ்தான் இந்தியா அணு ஆயுதம் ஒன்றை பரீட்சித்திருப்பதாகக் குறை கூறியது:

இந்தியாவும் பாகிஸ்தானும் வேறு இரண்டு உடன்படிக்கைகளையும் செய்யும்.

ஒன்று, இரட்டை வரிவிதிப்பு முறையைத் தவிர்ப்பது. மற்றது, கலாசாரப் பரிவர்த்தனையை மேற்கொள்வது. (எ)

ஒருவர் பலி!

ஜெருசலம், டிச.28

ஆக்கிரமிப்புக்குள்ளான மேற்கு கரைப் பிரதேசத்தில் இஸ்ரவேலிய இராணுவம் சுட்டதில் ஒரு பலஸ்தீனிய இளைஞர் உயிரிழந்தார்.

20 பேர் வரையில் காயமடைந்தனர். (எ)

ஆர்மேனியா - அஸர்பைஜான் தகராறைத் தீர்க்க முயற்சி

மாஸ்கோ, டிச. 28

ஆர்மேனியா அஸர்பைஜான மாநிலங்களுக்கு இடையேயான இனமோதலைத் தீர்க்கும் முயற்சியில், சோவியத் யூனியனின் பிரபலமனித உரிமைவாதி டாக்டர் அன்ட்றி சகாரோவ் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்குமுன்னர் சோவியத்அரசினால் கோர்க்கி என்னுமிடத்தில் தனிமைச்சிறையில்அடைத்து வைக்கப்பட்டிருந்த இவர் அண்மையில்தான் கோர்பச்சேவ் அரசினால் விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று ஆர்மேனியா தலைநகருக்கு விஜயஞ் செய்த டாக்டர் சகாரோவ், இனமோதல் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுக்களை இருதரப்பாருடனும் நடத்தினார்.

பேச்சுக்கள் பற்றிய விவரங்களை பகிரங்கமாக வெளியிடக்கூடாது என்று டாக்டர் சகாரோவுக்கு மாஸ்கோ அரசு உத்தரவிட்டிருக்கிறது. (எ)

சார்க் மாநாடு இன்று ஆரம்பம்

இஸ்லாமபாத் டிச, 28

தென்கிழக்காசிய பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் நான்காவது உச்சி மாநாடு நாளை வியாழன் இஸ்லாமபாத்தில் ஆரம்பமாகின்றது.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், இலங்கை, பூட்டான் ஆகியவற்றின் தலைவர்களின் உச்சி மாநாடாக இது அமைகின்றது.

கடந்த ஆண்டு சார்க் மாநாடு நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்றது.

இந்த ஆண்டு இலங்கையில் நடத்தப்படுவதாக இருந்தது. வன்செயல்கள் தீவிரம் அடைந்த காரணத்தினால் பின்னர் பாகிஸ்தானில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. [எ]

காஸ்ட்ரோபதவியில்நீடிப்பதா? கியூபாவில்எழுந்துள்ளகேள்வி

ஹவானா. டிச. 28

திரு. பிடல்காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்று வருகிற ஜனவரி முதலாம் திகதியுடன் 13 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

இந்தக் கட்டத்தில் திரு. காஸ்ட்ரோ பதவியில் நீடிப்பது பற்றி மக்கள் மத்தியில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காஸ்ரோ பதவியில் நீடிப்பது குறித்து மக்களின் கருத்தை ஹவானா அரசு அறியவேண்டும், அதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும் - இப்படி நூற்றுக் கணக்கான பிரமுகர்கள் காஸ்ட்ரோ அரசுக்கு விண்ணப்பித்தனர்.

இதனைக் காஸ்ரோ அரசு நிராகரித்துவிட்டது.

காஸ்ட்ரோ பதவி விலகுவதா? முட்டாள்தனமான கோரிக்கை இது - இப்படி அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ)

அமெரிக்காவின் பதிலடி

வாஷிங்டன், டிச 28

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் உணவுப்பொருள்கள் மீதான வரியை அமெரிக்கா இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் இறைச்சிக்கு உணவை ஐரோப்பிய நாடுகள் முற்றாகத் தடை செய்ததற்குப் பதிலடியாகவே இந்த நடவடிக்கையை அமெரிக்கா எடுத்துள்ளது. (எ)

அமெரிக்க 'டைம்' சஞ்சிகை அறிவிப்பு

500 கோடி மக்கள் வாழும் 'பூமி' 1988 இன் 'பிரமுகர்' ஆகத்தெரிவு!

நியூயோர்க், டிச. 28

1988 இன் பிரமுகராக 'பூமி'யை டைம் சஞ்சிகை தெரிவு செய்து உள்ளது.

'ஆபத்துக்குள்ளாகி உள்ள உலகம்' என்று டைம் சஞ்சிகை பூமியை வர்ணித்திருக்கிறது.

அழிவிலிருந்து உலகைக் காப்பாற்ற சர்வதேச புனித யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று 'டைம்' உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் சிறந்த பிரமுகர்களாக சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் ஆகியோரை டைம் தெரிவு செய்தது.

1982 இல் வழமைக்கு மாறாக ஆண்டின் பிரமுகராக கம்பியூட்டரை டைம் சஞ்சிகை தெரிவு செய்திருந்தது. (எ)

அங்கோலா கெரில்லாக்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முடிவு

லுவாண்டா,டிச 28

யூனிற்றா கிளர்ச்சியாளருக்கு பொது மன்னிப்பு வழங்கஅங்கோலா அரசு முடிவு செய்துள்ளது.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைவோரே பொதுமன்னிப்புப் பெறத் தகுதியுள்ளவர்கள் என அங்கோலா அரசு நேற்று அறிவித்தது.

அமெரிக்காவிடம் இருந்து ஆயுத உதவிகளைப்பெற்று அங்கோலா அரசுக்கு எதிராக யூனிற்றா கிளர்ச்சியாளர்கள் கெரில்லா யுத்தம் நடத்தி வருவது தெரிந்ததே.

நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் உடன்பாடு கைச்சாத்தானதைத் தொடர்ந்து யூனிற்றா கிளர்ச்சியாளருக்கு உதவப்போவதில்லை என தென் ஆபிரிக்கா அறிவித்துவிட்டது.

ஆயுத உதவி வழங்கி வரும் அமெரிக்க அரசு மௌனஞ் சாதித்து வருகின்றது:

இக்கட்டத்தில் அங்கோலா அரசின் பொது மன்னிப்பு பிரகடனம் வெளியாகியுள்ளது.

பதவி விலக வேண்டும்

பெல்கிறேட், டிச. 27

யூகோஸ்லேவியாப் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று கோரி பெல்கிறேட் பத்திரிகை ஒன்று நேற்று ஆசிரியர் தலையங்கம் எழுதியது. (எ)

எம். ஜி. ஆர் வழியில் ராஜீவ்காந்தி செல்வது புலியைப் பார்த்து பூனை சூடு போட்ட கதையாம்

முன்னாள் அமைச்சர் கிருஷ்ணசாமி கிண்டல்

சேலம். டிச. 28

'பிரதமர்ராஜீவ்காந்தி எம். ஜி. ஆரைப்போல நடித்து ஓட்டு வாங்க நினைக்கிறார்'' என்றுமுன்னாள் அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி கூறினார்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஜானகி அம்மாள் அணி அ. தி. மு. க. சார்பில் பொதுக் கூட்டம் நடந்தது:

அதில் கே.ஏ கிருஷ்ணசாமி பேசியதாவது.

எம். ஜி. ஆர்.

''தமிழ்நாட்டில் மரித்துப்போய்விட்ட இ.காங்கிரசை உயிர்ப்பிக்கிற வேலையில் பிரதமர் ராஜீவ்காந்தி ஈடுபட்டுள்ளார். தமிழகத்தில் கிராமம் கிராமமாகச் செல்கிறார். எம். ஜி. ஆர். போல நடிக்க முயற்சிக்கிறார்.

பத்திரிகைகள்கூட— 'எம். ஜி. ஆர். பாணியை ராஜீவ்காந்தி பின்பற்றுகிறார்' என்று எழுதுகின்றன.

எங்கள்இதயதெய்வம் எம். ஜி. ஆர். செய்ததைப்போல், தேர்தலுக்காகச் செய்து காட்டுகிறார் ராஜீவ் காந்தி.

ஆனால் எம். ஜி. ஆர். வேறு! ராஜீவ் வேறு! ராஜீவ்காந்தி செய்யும் நடவடிக்கைகள் எல்லாம் எப்படி இருக்கிறது என்றால் 'புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட'' கதையாகத்தான் இருக்கிறது — ராஜீவ் காந்தியின் இந்த முயற்சி வீண் முயற்சி ஆகும்.

புரட்சித்தலைவர் அவர்கள் [illegible] பல மாதங்கள் ஆகின்றன. அவர் மறைவுக்குப்பின் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

ஆனால் இன்றைக்கு அந்த வெற்றிடத்தை நிரப்பும் சக்தியாக — அன்னை ஜானகி எம். ஜி. ஆர். அவர்கள் வந்துவிட்டார்கள்.

எப்படி எம். ஜி. ஆருக்குள் ஒரு ''சூப்பர்!' எம். ஜி. ஆர். உருவாகி 1984ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றாரோ அதுபோல் இன்றைக்கு அன்னை ஜானகி எம். ஜி. ஆருக்குள் ஒரு சூப்பர் எம். ஜி. ஆர். என்ற சக்தி உருவாகி இருக்கிறது.

[illegible] 1967இல் காங்கிரஸ்கட்சி மறைய புரட்சித் தலைவர் ரத்தத் துளிகளைக் காணிக்கை ஆக்கினாரோ, 1972ல் தப்புக்கணக்குப்போட்ட கருணாநிதி அவர்களை, 1977ல் தூக்கி எறிந்து அண்ணாவின் ஆட்சி அமைந்ததோ அதுபோல இன்றைக்கு 'ராஜீவ் - கலைஞர்' இருவரும் போடும் தப்புக் கணக்குகளை அன்னை ஜானகி எம். ஜி. ஆருக்குள் இருக்கும் சூப்பர் எம். ஜி. ஆர். தூக்கி எறிவார்.

அதன்காலத்தின்கட்டாயம்தான் - வருகிறதைத் திங்களில் மீண்டும் புரட்சித் தலைவரின் ஆட்சி தமிழகத்தில் அமைய இருக்கிறது.

யாரும் மீண்டும் மீண்டும் தப்புக் கணக்குப் போடவேண்டாம்''.

இவ்வாறு கே. ஏ. கிருஷ்ணசாமி பேசினார். (எ-4)

ஆந்திரா கலவரத்தில் முப்பது பேர் பலி!

ஹைதராபாத், டிச. 28

ஆந்திரமாநிலத்தில் ஏற்பட்ட வன்செயல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது.

கரையோரப் பகுதியில் உள்ள 24 பட்டினங்களில் காலவரையறையற்ற ஊரடங்கு இன்னமும் அமுல் நடத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

பதற்றநிலை நீடிப்பதால், மத்திய ரிசர்வ் பொலீஸ் படையின் மேலும் 5 பிரிவுகள் ஆந்திராவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதன் மத்தியில் குண்டுத்தாக்குதலில் மரணமடைந்த இந்திராகாங்கிரஸ் எம் எல். ஏ. மோகனரங்கராவின் ஈமக்கிரியைகளில் மக்கள் கலந்து கொள்வதற்காக விஜயவாடாநகரில் ஊரடங்குச்சட்டம் இன்று காலை 5 30மணி முதல் மாலை 5 30 வரை தளர்த்தப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது

ரங்கராவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக புதுடில்லியில் இருந்து இந்திராகாங்கிரஸின் உயர் மட்டக்குழு ஒன்று விஜயவாடாவுக்குச் சென்றது. (எ)

பங்களாதேஷில் படகு விபத்து: பயணிகள் 200 பேர் பலி?

பங்களாதேஷில் பயணிகள் படகு ஒன்றில் எண்ணெய்க்கப்பல் ஒன்று மோதியது.

இதனால் படகு கவிழ்ந்து கடலில் மூழ்கியது. 250க்கும் அதிகமான பயணிகள் படகில் அப்போது இருந்தனர்.

அவர்களில் 200 பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நான்கு பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. 25 பயணிகள்நீந்திக் கரைசேர்ந்துவிட்டனர். (எ)

சேட்டிங் சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

உதயன்

29 - 12 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :: யாழ்நகர்.

தாதிகள் பயிற்சிக்கு மேலும் 19 பேரின் பெயர்கள்

யாழ்ப்பாணம் டிச 29 கடந்த ஜூன் மாதம் கொழும்பில் நடைபெற்ற தாதிகள் தெரிவுப்பரீட்சையில் தோற்றி—அதன் பின்னர் கடந்த நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றுதவர்களில் 19 பேர் தாதிகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களது பெயர் விவரம் வருமாறு:—

கே. யோகேஸ்வரி (நயினாதீவு) எஸ். வசந்தரோகினி (மண்டைதீவு), எஸ். சரிதா (மண்டைதீவு)

எம். சுகந்தி (தொல்புரம்) எஸ். ரவீந்திரன் (மயிலிட்டி), கே. ரி. மலர்மதி (சுன்னாகம்), எஸ். மதிவதனி (குப்பிளான்) கே. நிரஞ்சலி (யாழ்ப்பாணம்), எஸ். சரோஜினிதேவி (புலோலி), எல். தயாளினி (மிருசுவில்), எஸ் எம். சோபனா (மட்டுவில்), எம். சுரேஸ்நேசன் (அரியாலை). பி. ஏ சசிகலா (இணுவில்), எல். மீரா (கொழும்புத்துறை) எஸ். பாலினி (யாழ்ப்பாணம்). செல்வி கே. குலரட்ணம் (கிளிநொச்சி), மேரி. சுவர்ணா (திருக்கேதீஸ்வரம்). அன்ரனி. லோறன்ஸ் (அலம்பில்), எம். செந்தாமரைச்செல்வி (முல்லைத்தீவு),

இவர்களுக்கான பயிற்சிகள் நாளை 30 ஆம் திகதி யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

இந்த 19 பேரும் தமது நியமனக் கடிதங்களை யாழ். சுகாதாரப்பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். கல்விச் சான்றிதழ், கிராம சேவையாளரால்வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் என்பவற்றுடன் அவர்களைச் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ-10-5)

88 பேர் பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், டிச. 29 தாதிகள் துரித பயிற்சித் திட்டத்தின் அடிப்படையில் பயிற்சி பெறுவதற்கு வடமாகாணத்தில் 88 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

தேர்தல் தொகுதி வாரியாக இந்தத் தெரிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவர்களது பெயர்ப் பட்டியல்களும், நியமனக் கடிதங்களும் யாழ் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

இவர்களுக்கான பயிற்சி நெறி ஜனவரி 3 ஆம் திகதி யாழ் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-5)

வாடிக்கையாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்

மின்சாரம் இல்லாவிடினும் ஜெனறேற்றர் மூலம் பாஸ்போட், அடையாள அட்டை, கலர்படம் உடனடியாகச்செய்து கொடுக்கப்படும்.

குகன் ஸ்ரூடியோ
சாவகச்சேரி,
(C/1012)

'அமெரிக்கா' 'தாய்வான்'
★ உடனடிப் பயணம் ★

அமெரிக்கா செல்ல விரும்புபவர்கள் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்;

சந்தர்ப்பத்தைத் தவறவிட வேண்டாம்!
எம்மை காலை 9 மணிமுதல் 2 மணிவரை சந்திக்கலாம்.

V. T. R. TRAVELS
41, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(8527)

நெல்லியடி வெறிச்சோடியது

கரவெட்டி டிச. 29 நெல்லியடிப் பகுதியில் நேற்றுக்காலை பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. தொடர்ச்சியாகக் கேட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தங்களைத் தொடர்ந்து கடைகள் இழுத்து மூடப்பட்டன மக்கள் பயத்தினால் சிதறி ஓடினர்.

நேற்றுக்காலை சுமார் பத்து மணியளவில் நெல்லியடிக்கு வடக்குப்புறமாக நீண்டநேரம் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

அதனைத் தொடர்ந்து வானத்தை நோக்கிச்சுட்டவாறு அமைதிப்படையினர் நெல்லியடி மற்றும் சந்தைப் பகுதிகளை நோக்கிச் சென்றனர்.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களைத் தொடர்ந்து மக்கள் என்னவோ ஏதோ என்று தெரியாமல் சிதறி ஓடினர். அதனால் நெல்லியடிப் பகுதி வெறிச்சோடியது. (அ-70)

22 மருத்துவ மாதுகள் பயிற்சிக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், டிச 29 தற்பொழுது நடைபெற்றுவரும் மருத்துவ மாதுப் பயிற்சி நெறியில் மேலும் 22 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இவர்களது பெயர்ப் பட்டியலும், நியமனக் கடிதங்களும் வந்து சேர்ந்துள்ளன.

இவர்கள் ஜனவரி 2 ஆம் திகதி தொடக்கம் பயிற்சிநெறியில் இணைந்து கொள்ளவுள்ளார்கள். (உ-5)

இரவு நேர..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம் பெறப்படும் மின்சாரத்துடன் இந்த காஸ்டேர்பைன் மூலம் பெறப்படும் மின்சாரத்தையும் சேர்த்து யாழ். மாவட்டத்துக்கு பகல் வேளையில் பகுதி பகுதியாக ஒரு மணி நேரம் மின்சாரம் விநியோகிக்கப்படும்

இத்தகவலை இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-5)

செய்திச் சாரம்

ஜனாதிபதி ஆட்சி வராது!

ஆந்திர மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்படுவதை மத்திய அரசு ஆதரிக்கவில்லை.

—இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிரேமாவின் சட்டத்தரணி சுந்தர்

கொழும்பு. டிச, 29 ஜனாதிபதித் தெரிவை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் அது சம்பந்தமான தனது நலன்களை சட்டரீதியாகக் கவனிக்க திரு. பிரேமதாஸ, பிரபல சட்டத்தரணி எஸ். சுந்தரலிங்கத்தை நியமித்திருக்கிறார். (உ-எ)

இயக்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உருவெடுத்த மோதல்களின்போது இ நீ ச.இ. தனது நிலைப்பாட்டை விளக்கியதுடன், மேலும் இத்தகைய மோதல்களைக் கைவிட்டுத் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரண்படாது செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்தது.

இன்று தமிழ்ப் பிரதேசங்களில் மீண்டும் தோன்றியுள்ள இயக்க மோதல்கள் இக்காலகட்டத்தில் தேவையற்றவையாகவே தோன்றுகின்றன.

இவ்வாறான மோதல்களில் பொதுமக்களில் ஏறத்தாழ முன்னூறு பேர் உயிரிழந்துள்ளமை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டியதொரு நிகழ்வாகும்.

ஆயுதங்களால் மட்டும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாது, சுதந்திரம் சுயஆதிக்கம், மனித உரிமை போன்றவையை மதித்து, அவர்களுக்கிடையே இயன்றளவு ஆகக் கூடுதலான புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டுமென இ. நீ.ச இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது - என்று உள்ளது. (அ-51)

ஒப்பந்தத்தை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள டாம்—இ—ஷோ உல்லாச மாளிகையில் தலைவர்கள் இருவரும் அதிகாரிகள் இன்றி தனிமையில் பேச்சுக்கள் நடத்துவர். அழைக்கும் போது கலந்து கொள்ள வெளியுறவு அமைச்சர்கள் வெளியே தயாராக இருப்பர்.

இலங்கை ஜனாதிபதி என்ற முறையில் திரு. ஜெயவர்த்தன கலந்து கொள்ளும் கடைசி 'உலக மேடை' இது வாகும். (உ-எ)

இடம் மாற்றம்: ஆசிரியர்களுக்கு நேர்முக பரீட்சை

கொழும்பு, டிச. 29 இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து. அது சம்பந்தமான நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறிய கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு மீண்டும் ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

வருகிற ஜனவரி 9 10 ஆம் திகதிகளில் இப் பரீட்சை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடத்தப்படும்.

மாவட்ட ரீதியில் ஆசிரிய நியமனம் பெற்று நான்கு ஆண்டுகள் கஷ்டப்பட்ட பிரதேசங்களில் கடமையாற்றிய இந்த ஆசிரியர்களுக்கு கடந்த 10 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

இதற்குச் சமுகமளிக்கத் தவறியவர்களே மீண்டும் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளலாம். (உ-எ)

தேர்தலில் றொனியும்போட்டி

சென்னை, டிச. 29 வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாக முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் இந்தியாவில் வைத்து தெரிவித்தார்.

சென்னையில் றொனிடி மெல் தங்கியிருக்கிறார்.

பஹாமாஸ் வழியாக அவர் நியூயார்க் செல்ல விருப்பதாக கொழும்பில் வெளியான செய்தியை அவர் மறுத்தார். (உ-ச-எ)

குண்டு வெடிப்பு காரணம்

லண்டன், டிச, 29 ஸ்கொட்லாந்தில் 275 பேரின் உயிரைப் பலிகொண்ட பான்அம் விமான விபத்துக்கு குண்டுவெடிப்புக் காரணமாக இருக்கலாம் என்பதற்கான பூர்வாங்க தடயங்கள் கிடைத்திருப்பதாக லண்டனில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

கைது செய்ய உத்தரவு

கொழும்பு, டிச: 29 சுதந்திரக் கட்சியின் பண்டாரகம அமைப்பாளர் ஆர். திலக் மகேந்திர ஜெயதிலகா தலைமறைவானதை அடுத்து அவரைக் கைது செய்யுமாறு பாணந்துறை பதில் நீதிவான் பகிரங்க வாரண்ட் பிறப்பித்தார்

ஸ்டேர்லிங் சப்மெஷின் துப்பாக்கியும், ரவைகளும் வைத்திருந்ததாக அவரும் மற்றும் எட்டுப் பேரும் கைதாகிப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் (உ-எ)

அரச அதிபர்கள் முதலமைச்சரைச் சந்திப்பர்

கொழும்பு'டிச.29 வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களின் அரச அதிபர்களை முதலமைச்சர் திரு.அ. வரதராஜப் பெருமாள் சந்திக்கிறார்.

ஏனைய மாகாண அமைச்சர்களும் சந்திப்பில் கலந்து கொள்வர். மாகாண அரசின் கொள்கைத் திட்டங்கள், வேலைத் திட்டங்கள் பற்றி அரச அதிபர்களுக்கு முதலமைச்சர் அப்போது விவரிப்பார். (ச-எ)

இயக்க வேறு——

(1ம் பக்கத் தொடர்சி)

கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் ஈ.பி ஆர். எல். எவ்வின் யாழ் பணிமனையில் திரு. கே. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

அங்கு திரு. கே, ரவீந்திரன் மேலும் கூறியதாவது:-

பலாலி, வயாவிளான், மயிலிட்டிப் பகுதி மக்கள் ஷெல் தாக்குதல்களினாலும், விமான நிலைய, இராணுவமுகாம் விஸ்தரிப்புகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்கு மாகாண அரசு முன்னுரிமை அளிக்கும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் ஏனைய மக்களோடு சமமாக வாழக்கூடியதான பொருளாதாரத் திட்டங்களை செயற்படுத்துவோம் - என்றார். (உ)

Obituary

Mr. S. Paramanathan

S. Paramanathan (former Probation Officer Jaffna) beloved husband of Freda (17167) PIERSON, Defroit, Michigan 42219 U. S. A. brother of Arulananthan (Puttur) Kirupairatnam (Australia), Selvanatham (Australia) the late Karunanthan, Bro-in-law of Arthur Kanagaratnam (Puttur) passed away at Brisbane Australia on 14-12-88.

Friends and relations please aceept this information.

J. A. C. Arulananthan
Puttur.
(8517)

மரண அறிவித்தல்கள்

திருமதி பாலசுந்தரம் செல்வபாக்கியம்

(ராஜா அச்சகம், அச்சுவேலி)

திருமதி பாலசுந்தரம் செல்வப்பாக்கியம் காலமானார்.

இவர் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த திரு. ச. பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னு தம்பதிகளின் புதல்வியும், திருவாளர்கள் தியாகராசா, சின்னத்துரை, காலஞ் சென்ற செல்லத்துரை, இராசதுரை, இரத்தினம், நடராசா, திருமதி செல்லம்மா ஆசை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலகுணராசா, வசந்தாமலர், நற்குணசிங்கம் (நாதன்) (ஜேர்மனி), செந்தாமலர், மனோரஞ்சிதமலர், விமலேந்திரமலர், லிங்கராசா (இந்தியா), ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராசா (சவூதி), தம்பிராசா (ராஜா அச்சக பங்காளர்), இராசதுரை, மீனா (ஜேர்மனி), மகேஸ்வரி, (ஆசிரியை,ஸாகிரா மகாவித்தியாலயம், கட்டுகாஸ்தோட்டை), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக 29-12-88 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அச்சுவேலி இல்லத்திலிருந்து வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
பா. குணராசா
ராஜா அச்சகம்,
அச்சுவேலி.
(8524)

திரு. சுப்பையா நாராயணன்

சுப்பையா நாராயணன் [நயினார்] ஆச்சாரி காலமானார். இவர் கோமதியம்மாளின் அன்புக் கணவரும், ராமலட்சுமி, சண்முகவள்ளி, சுலோசனா, பழனிவேலு, உஷாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமகிருஷ்ணன் [இந்தியா], கதிரவேலு கோபாலகிருஷ்ணன் (இந்தியா), ராஜு [இந்தியா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 29-12-88 மாலை 3.00 மணியளவில் நாவலர் ரோட் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் பழனிவேலு
177, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்
(8519)

திருமதி செல்லம்மா சிவஞானசுந்தரம்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி. செல்லம்மா சிவஞானசுந்தரம் 27-12-88இல் ஹொங்கொங்கில் காலமானார். இவர் காலஞ்சென்ற சிவசம்பு தாயம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்ற திரு. ந. சிவஞானசுந்தரத்தின் (இலங்கையர்கோன்) அன்பு மனைவியும், டாக்டர் ஸ்ரீஸ்கந்தவர்மன் (ஹொங் கொங்), சந்திரலேகா - வாமதேவா (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்). ஜெயவர்மன் (Accountant, Forbes and Walkers, Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் வசந்தமாலா ஸ்ரீஸ்கந்தவர்மன் (ஹொங் கொங்). பொறியியலாளர் திரு. V. K. வாமதேவா(தொழில்திணைக்களம் கொழும்பு) திருமதி பவானி ஜெயவர்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிருணாளினி, சரண்யன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. V. S. வடிவேல் (அவுஸ்திரேலியா), திருமதி புவனேஸ்வரி -திருஞானசெல்வம், டாக்டர் V. S. பத்மநாதன், திருமதி மீனாம்பிகை கனகசபாதி, திருமதி. மகாதேவி குணசிங்கம் (சிம்பாப்வே)'ஆகியோரின். அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஹொங்கொங்கில் நடைபெறவுள்ளது.

தகவல்:
V. K. வாமதேவா.
'குந்தவை'
இராஜவீதி, திருநெல்வேலி.
(8708)

திருமதி லலிதராணி யோகேஸ்வரன்

(யாழ். தந்தித் தொடர்புத் திணைக்களம்)

காலஞ்சென்ற திரு. வெ யோகேஸ்வரனின் அன்புமனைவியும், திருமதி தம்பிராஜா பொன்னம்மாவின் புதல்வியும், திருமதி சரஸ்வதியம்மா வெற்றிவேற் பிள்ளையின் மருமகளும் திருமதி திலகராணி மகாலிங்கம், திரு. த. சிவலிங்கம்' (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் சகோதரியும், திரு தில்லையம்பலம் (ஆசிரியர், கடையாமோட்டை M M V) திருமதி யோகாம்பிகை சிவலிங்கம், திருமதி தானநாயகி ஸ்ரீ காந்தன், திரு. மகாலிங்கம் (அதிபர், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும் திரு. S. ஸ்ரீகாந்தனின் (வலிகாமம் மேற்கு. பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகம்). சகலையும், மகிதரன், மகிதினி ஆகியோரின் சிறியதாயாரும் சிவதரன், சேதீஸ்வரன், ஆகியோரின் மாமியாரும் ஆகிய திருமதி லலிதராணி யோகேஸ்வரன் 28-12-88 அன்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-12-1988) பி. ப. 2 மணியளவில் கொத்தத்துறை மயானத்தில் நடைபெறும்

தகவல்:
த. சிவலிங்கம்
(8531)

அஷ்டலக்ஷ்மி கலண்டர் ஓர் அமுதத் தயாரிப்பு
TRADE MARK

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 29th December 1988